[2019 பிப்ரவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

உதவிப் பொறியாளர் அலுவலகக் கட்டடம்

***39433—திரு. பி. முருகன்**:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், மேகலசின்னம்பள்ளி கிராமத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேப்பனஹள்ளி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், மேகலசின்னம்பள்ளி கிராமத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. சொந்தக் கட்டடம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதற்கான இடத்தைத் தேர்வு செய்வதற்காக மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு கோரப்பட்டுள்ளது. இடம் கிடைத்தவுடன் அங்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட கடையம் ஒன்றியம் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. அந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் பெத்தான்பிள்ளை குடியிருப்பு,

2019 பிப்ரவரி 11]

கருத்தபிள்ளையூர், அழகப்பபுரம், சம்மங்குளம், கோவிந்தபேரி ஆகிய கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராம மக்களின் வாழ்வாதாரமே விவசாயமும், கால்நடை வளர்ப்பும்தான். இப்பகுதிகளில் அடிக்கடி வன விலங்குகள் வருகின்றன. 32 கிலோ மீட்டர் தூரத்திற்கு solar *மின்வேலி அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த வேலி சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. அதேசமயம், இந்த வருடம் கூடுதலாக யானைகள் புகாதவாறு களவன்காட்டிலிருந்து மத்தலம்பாறை வரைக்கும் 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு (குறுக்கீடு) நீங்கள் எல்லாம் ஒருங்கிணைந்து செய்கின்றீர்கள், நீங்கள் அவரைக் காட்டக் கூடாது. இது மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை, மக்களுடைய உயிருக்கு ஆபத்தாக இருக்கின்றது, கரடி, புலி போன்ற வனவிலங்குகள் வருகின்றன. யானைகள், மான்கள் போன்றவை விவசாயப் பயிர்களை முழுவதுமாக அழிக்கின்றன. இது அவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை மட்டுமல்ல; அவர்களுடைய உயிர்ப் பிரச்சினையும்கூட. மின் வேலியை அமைப்பது மின்சாரத் துறை. அதனைப் பராமரிப்பது வனத் துறை. அந்த மின் வேலியை சரியாக, முறையாக இயங்குகின்ற அளவிற்கு அமைக்க வேண்டும். அந்த மின் வேலியைத் தொட்டால் யாருக்கும்* shock *அடிக்க மாட்டேன் என்கின்றது. அந்த அளவில்தான் அந்த மின் வேலி இருக்கின்றது. ஆகவே, அதனைச் சிறப்பாகப் பராமரித்து, புதிதாக அமைக்கப்படுகின்ற மின் வேலியையும் முறையாக அமைத்துத் தர வேண்டும் என்று பணிவோடு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அந்த மின் வேலியைத் தொட்டால்* shock *அடிக்கவில்லை என்று சொல்கின்றார். அதைத் தொட்டு* shock *அடித்துவிட்டால், இங்கு வந்து பேச முடியாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை நியாயமானது. அந்த மின் வேலி அமைக்கும் பணியானது வனத் துறையைச் சேர்ந்தது. அந்த வேலியை அமைக்கும் பணி மின்சார வாரியத்தினுடைய வேலை அல்ல, அது வனத் துறையினுடைய சார்பாக அமைக்கப்படுகின்றது. மாண்புமிகு வனத் துறை*

அமைச்சர் அவர்களும் இங்கே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, கூடலூருக்கு கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்தித் தரப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். ஆனால், ஓராண்டு கழித்தும் இதுவரையில் அதற்கான பூர்வாங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அந்தப் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்? அந்த அலுவலகத்தை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே கோரிக்கை வைக்கின்றபோது, அரசின் மூலமாக உடனடியாக அவற்றை நிறைவேற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், இடம் கிடைப்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கேட்கின்றபோது அது வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட இடமாக இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையிடமிருந்து அனுமதி பெறுவது கடினமாக இருக்கின்றது. ஆகவே, துணை மின் நிலையமாக இருந்தாலும் சரி, அலுவலகமாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதிகளில் இடம் கண்டறியப்பட்டது என்று சொன்னால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அந்தவகையிலே, அது Forest Land ஆக இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையினுடைய

2019 பிப்ரவரி 11]

அனுமதியைப் பெறவேண்டியிருக்கின்றது. அனுமதி கிடைத்தவுடன்தான் அலுவலகம் கட்ட முடியும். ஏனென்றால் நாங்கள் அறிவிக்கின்றோம்; அறிவித்தபின், அந்த இடத்தைப் பெறுவதிலே சிறிது காலதாமதமாகிவிடுகிறது. துறையின் வாயிலாகக் கோப்புகளை அனுப்பி, அனுமதி பெறுவதில் சிறிது காலதாமதம் ஆகிவிடுகிறது. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

பாதாள சாக்கடைத் திட்டம்

***5663—திரு. கே. பழனி**:

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.